# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை

### இந்திய நன்கொடை உதவியுடன் கிளிநொச்சியில் நிர்மாணிக்கப்பட்ட திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரிக் கிராமம் பயனாளிகளிடம் கையளிப்பு

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா மற்றும் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சர் கௌரவ அநுர கருணாதிலக ஆகியோர் இணைந்து கிளிநொச்சியில் உள்ள திருவள்ளுவர் குடியிருப்பு மாதிரிக் கிராமத்தை 2025 ஜனவரி 17 ஆம் திகதி திறந்து வைத்து 24 பயனாளிக் குடும்பங்களிடம் கையளித்தனர். நகர அபிவிருத்தி , நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை பிரதி அமைச்சர் கௌரவ டி.பி. சரத் அவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தார்.

2. இந்நிகழ்வில் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சின் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலர், தேசிய வீடமைப்பு அதிகார சபை தலைவர் மற்றும் சிரேஸ்ட அதிகாரிகள், இலங்கையின் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள், வட மாகாண சபை மற்றும் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகத்துறை ஆகியவற்றின் சிரேஸ்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

3. குறித்த மாதிரி கிராம வீடமைப்புத் திட்டம், இந்திய அரசின் நன்கொடை உதவியுடன் இலங்கையின் நகர அபிவிருத்தி , நிர்மாணம் மற்றும் வீடமைப்புத் துறை அமைச்சுடன் இணைந்து இலங்கையின் 25 மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017 ஒக்டோபரில் கைச்சாத்திடப்பட்டது. இலங்கையில் குறைந்த வருமானம் பெறும் 600 குடும்பங்கள் மாவட்ட வீடமைப்பு குழுக்களால் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு வீடுகளை வழங்குவதனை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தலா 24 வீடுகளைக் கொண்ட மாதிரிக் கிராமம் அமைக்கப்படுவதே இத்திட்டமாகும்.

4. இத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம், கண்டி, கம்பஹா, அநுராதபுரம், பதுளை, மாத்தளை, புத்தளம், கொழும்பு, திருகோணமலை, மொனராகலை ஆகிய 12 மாவட்டங்களில் மாதிரிக் கிராமங்கள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் 96 வீதத்துக்கும் அதிகமானவை நிறைவடைந்திருக்கும் நிலையில், மீதமுள்ள மாதிரி கிராமங்களும் விரைவில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**************

**17 ஜனவரி 2025**
**கொழும்பு**